## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 03/2025 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | கந்தசாமி |
| Father Name | : | பழனிச்சாமி |
| Village | : | திருப்பூர் |
| Taluk | : | திருப்பூர் |
| Age | : | 55 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 31.10.2024 ஆம் தேதியன்று எனது தம்பி காங்கேயத்திற்கு வேலையாக சென்றுவிட்டு காங்கேயம் – தாராபுரம் செல்லும் சாலையில் தாராபுரம் நோக்கி அவரது இருசக்கர வாகனமான யூனிக்கான்பைக்கில் சென்று கொண்டிருக்கும்போது AMK ரைஸ்மில் அருகே அவருக்கு எதிரே வந்த 2244 என்ற பதிவு எண் கொண்ட டொயோட்டா கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், விபத்தில் அவருக்கு கை, கால், தொடை, தாடை மற்றும் உடம்பு முழுவதும் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததாக எனக்கு சக்திவேல் என்பவர் போன் மூலம் தகவல் சொன்னார். பின்னர் நான் சம்பவ இடத்திற்கு சென்று 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்தோம். பின்னர் மேல்சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல பரிந்துரைத்தார்கள். பின்னர் அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அன்று இரவு 12.00 மணியளவில் இறந்துவிட்டதாக மருத்துவர் கூறினார்கள். பின்னர் 01.11.2024 ஆம் தேதியன்று ஊதியூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது தம்பியின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையின்போது சாட்சியாக உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் பற்றி கேள்விப்பட்டுத்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோனவர் எனது தம்பி என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக எனக்கு தகவல் சொன்ன சக்திவேல் எனது நண்பர் என்றால் சரிதான். விபத்தானது AMK மில்லுக்கு தென்புறமாக நடந்ததா, வடபுறமாக நடந்ததா, ரோட்டின் கிழபுறமாக அல்லது மேல்புறமாக நடந்ததா என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு நேரடியாக செல்லவில்லை என்றால் சரிதான். புகார் நான் கைப்படவில்லை எழுதவில்லை என்றால் சரியல்ல. நான்தான் எழுதினேன். விபத்தில் இறந்துபோனவர் எனது தம்பி என்பதால் விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.09 17:54:56 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 03/2025 |
| Deposition of Witness | : | PW- 2 |
| Name | : | சக்திவேல் |
| Father Name | : | முத்துச்சாமி |
| Village | : | பெருமாள்பாளையம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 54 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது பொருமாள்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 31.10.2024 ஆம் தேதியன்று எனது நண்பர் கந்தசாமியின் தம்பி காங்கேயம் – தாராபுரம் செல்லும் சாலையில் தாராபுரம் நோக்கி அவரது இருசக்கர வாகனமான யூனிக்கான் பைக்கில் சென்று கொண்டிருக்கும்போது AMK ரைஸ்மில் அருகே அவருக்கு எதிரே ஆஜர் எதிரி ஓட்டி வந்த TN 42 2244 என்ற பதிவு எண் கொண்ட டொயோட்டா காரானது வேகமாக வந்து மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. பின்னர் விபத்தில் அவருக்கு கை, கால், தொடை, தாடை மற்றும் உடம்பு முழுவதும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் கந்தசாமிக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். பின்னர் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த சாலையானது சற்று வளைவான பகுதி என்றால் சரிதான். விபத்து நடந்த நேரம் இரவு நேரம் 9.00 – 10.00 மணி இருக்கும் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன சென்னிமலை எனக்கு நன்கு தெரிந்தவர் என்றால் சரிதான். விபத்து நடந்தது AMK ரைஸ்மில் அருகே தென்புறமுள்ள வளைவான பகுதியில் நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்து பின்னிட்டுத்தான்

நான் அருகில் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே அங்கு 4, 5 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் போய் பார்த்த சமயம் விபத்து நடந்து முடிந்திருந்தது. யாருடைய கவனக்குறைவால் விபத்து நடைபெற்றிருந்ததது என்றால் என்னால் சரியாக சொல்லமுடியாது. ரோட்டின் மேற்குபுறமாகத்தான் விபத்து நடைபெற்றிருந்தது என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோனவர் எனது நண்பரின் தம்பி என்பதால் விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி கொடுக்கப்பட்ட பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.09 17:55:10 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 03/2025 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | செந்தில்குமார் |
| Father Name | : | பழனிச்சாமி |
| Village | : | வஞ்சிபாளையம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 54 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது வஞ்சிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 31.10.2024 ஆம் தேதியன்று எனது நண்பரின் தம்பி காங்கேயம் – தாராபுரம் செல்லும் சாலையில் குள்ளம்பாளையம் அருகே அவரது இருசக்கர வாகனமான யூனிக்கான்பைக்கில் சென்று கொண்டிருக்கும்போது AMK ரைஸ்மில் அருகே அவருக்கு எதிரே வந்த 2244 என்ற பதிவு எண் கொண்ட டொயோட்டா கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், விபத்தில் அவருக்கு கை, கால், தொடை, தாடை மற்றும் உடம்பு முழுவதும் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததாக எனக்கு சக்திவேல் மற்றும் கந்தசாமி ஆகியோர்கள் போன் மூலம் தகவல் சொன்னார்கள். பின்னர் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள். பின்னர் மேல்சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல பரிந்துரைத்தார்கள். பின்னர் அங்கு சென்று நான் பார்த்தபோது சென்னிமலை சிகிச்சை பெற்று வந்த நிலையில் அன்று இரவு 12.00 மணியளவில் இறந்துவிட்டதாக மருத்துவர் கூறினார்கள். எனது நண்பரின் தம்பியின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையின்போது சாட்சியாக உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது கேள்விப்பட்டுத்தான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று

எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோனவர் எனது நண்பரின் தம்பி என்பதால் விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி கொடுக்கப்பட்ட பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.09 17:55:20 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்